செ.வெ.எண்: 80/ பிப்ரவரி /2020 நாள்: 28.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக ஆணைக்குழு மற்றும் தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு "இளம் படைப்பாளர் விருது" மற்றும் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த 1500 தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2020) நடைபெற்றது.

---------------

"வாழ்க்கை வளமாக்க வாசிக்க வேண்டும்"
மாவட்ட ஆட்சித்தலைவர் மாணவ, மாணவியர்களுக்கு அறிவுரை

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக ஆணைக்குழு மற்றும் தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி திருச்சிராப்பள்ளி சார்பாக பள்ளி மாணவ மாணவியர்களுக்கு "இளம் படைப்பாளர் விருது" மற்றும் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த 1500 தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டை வழங்கும் விழா தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை சார்பாக பள்ளி மாணவ மாணவியர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தவும், எழுத்தாற்றலை மேம்படுத்தவும் நூலக வார விழாவின் போது மாவட்ட அளவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி மாவட்ட அளவில் 6 முதல் 8ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும், 9 முதல் 12ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டு மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 18 மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இளம் படைப்பாளர் விருது வழங்கப்படுகிறது. 2019ம் ஆண்டு நூலக வார விழாவில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு இன்றைய விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம் படைப்பாளர் விருது வழங்கி சிறப்பித்தார்.

மேலும், நூலக வார விழாவில் மாவட்ட மைய நூலக வாசகர் வட்டம் சார்பாக நடத்தப்பட்ட படம் பார்த்து கதை, கவிதை, கட்டுரை எழுதுதல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், மற்றும் பார்வைகுன்றியவர்களுக்கு நடத்தப்பட்ட வினாடிவினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி 1500 மாணவர்கள் மாவட்ட மைய நூலக உறுப்பினர்களாக சேர்ந்ததை தொடர்ந்து மாணவர்களுக்கு நூலக உறுப்பினர் அட்டையை வழங்கினார்.

மேலும், தூய வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி தே நொபிலி வாசகர் மன்றம் நடத்திய பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

விருதுகளையும், பரிசுகளையும் வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

மாவட்ட மைய நூலகத்தில் தினந்தோறும் ஆயிரம் பேர் நூலகத்தை பயன்படுத்துகின்றனர். நூலகத்தில் ஆயிரங்கணக்கானவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துகின்ற நூல்கள் உள்ளன. மாவட்ட மைய நூலகத்தில் பல்வேறு சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதே போல் மாவட்டத்தில் 142 நூலகங்கள், கிராமப்புறங்களில் நூலகங்கள் செயல்படுகிறது. மாணவர்கள், பொதுமக்கள் நூலகத்தை நன்கு பயன்படுத்த வேண்டும். மேலும் தமது உரையில் ஏன் படிக்க வேண்டும்? என்ன படிக்க வேண்டும்? எப்படி படிக்க வேண்டும்? என்பதில் ஒவ்வொருவரும் தெளிவாக இருக்க வேண்டும். வாழ்க்கையை ஒழுங்கான வாழ்க்கையாக மாற்றுவதற்கும், மகாத்மா காந்தி, நெல்சன்மண்டேலா போன்றவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை படிக்கும் போது நமது வாழ்க்கையும் செம்மையாக்கப்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு பட்டஅறிவு, படிப்பறிவு, என்ற வாழ்க்கை முறை ஒழுங்காக வாழ்வதற்கு நீதி நெறிமுறைகள் கடைபிடித்து வாழ்ந்து வந்தார்கள். வாசிப்பு என்பது நம்மிடையே செல்வம் வரும்பொழுது அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைக்கும், மற்றவர்களது வாழ்க்கைக்கும் எவ்வாறு பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதை அறியவும் வாசிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், மாணவ மாணவிகள் ஒரு இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டும். 12 ஆம் வகுப்பு முடித்த பின்னர் எந்த துறையில் அவர்களுக்கு விருப்பமோ அவர்கள் அந்த துறையை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் மற்றவர்களது விருப்பத்திற்காக துறையை தேர்ந்தெடுத்து படிக்க கூடாது. பாட புத்தகங்கள் அல்லாது பிற நூல்களையும் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு வாசிப்பதனால் பெறுகின்ற கல்வியை ஒருவரின் வாழ்க்கையை செம்மைப்படுத்தவும், சமுதாய நலனுக்காக பயன்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும். பல்வேறு புத்தகங்கள் படிப்பதன் மூலம், பொது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இன்றைய காலகட்டத்தில் மாணவ மாணவியர்களிடையே மின்சாதனங்களால் வாசிக்கும் பழக்கம் குறைந்து உள்ளது. செல்போன், இணையதளம் போன்றவற்றை நம்முடைய வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் இவற்றை அதிகமாக பயன்படுத்தினால் நுண்ணறிவு குறையும். செல்போன் இணையதளம் பயன்பாட்டிற்கு முன்பு ஒருவருக்கு இருந்த நுண்ணறிவு தற்பொழுது இவற்றை அதிகமாக பயன்படுத்தியதால் 50 சதவீதம் குறைந்துள்ளது. எனவே வாசிப்பு பழக்கத்தை அதிகரித்து வாழ்க்கையை நல்வழிப்படுத்தி வளமாக்க வேண்டும். அப்பொழுது தான் மாணவ மாணவிகள் வித்தியாசமானவர்களாக சமுதாயத்திற்கும், தங்கள் குடும்பத்திற்கும் பயனாக இருக்க முடியும் என்றும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தூய வளனார் கல்லூரியின் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் அருட்தந்தை எஸ்.ஜோசப்கென்னடி, மாவட்ட நூலக அலுவலர் திரு.அ.பொ.சிவகுமார், வாசகர் வட்டத்தலைவர் தமிழ்செம்மல் திரு.வீ.கோவிந்தசாமி, வாசகர் வட்ட துணைத்தலைவர்கள் திரு.இல.கணேசன், திரு.கி.நன்மாறன் ஆலோசகர் முனைவர்.அருணாச்சலம் முதல் நிலை நூலகர் திருமதி.சி.கண்ணம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர் எம்.எழில்ராஜகிருஷ்ணன் நன்றியுரை வழங்கினார்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி